www.Padasalai.Net www.TrbTnpsc.com

**8 - STD** **காலாண்டுத் தேர்வு - 2024** பதிவு எண். 8 1 9 1

நேரம்: 2.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 100

**I. அ) சரியான விடையை தேர்ந்தெடு** 10 x 1 = 10

1. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ________
அ) பொழுது ஆ) மரபு இ) வரவு ஈ) தகவு

2. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து ________
அ) கோட்டெழுத்து ஆ) சித்திர எழுத்து இ) ஓவிய எழுத்து ஈ) வட்டெழுத்து

3. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ________ மதிக்கின்றனர்.
அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

4. புகழாலும் பழியாலும் அறியப்படுவது ________
அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை இ) நடுவுநிலைமை ஈ) பொருளுடைமை

5. குறிப்பு வினையெச்சம் ________ வெளிப்படையாகக் காட்டாது.
அ) காலத்தை ஆ) வினையை இ) பண்பினை ஈ) பெயரை

6. உடனிகழ்ச்சிப் பொருளில் ________ வேற்றுமை வரும்.
அ) மூன்றாம் ஆ) நான்காம் இ) ஐந்தாம் ஈ) ஆறாம்

7. கோயிலப்பா என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
அ) கோ + அப்பா ஆ) கோயில் + லப்பா இ) கோயில் + அப்பா ஈ) கோ + இல்லப்பா

8. நலமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________
அ) நலம் + எல்லாம் ஆ) நலன் + எல்லாம் இ) நலம் + எலாம் ஈ) நலன் + எலாம்

9. தாம் + இனி என்னும் சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது
அ) தாம்இனி ஆ) தாம்மினி இ) தாமினி ஈ) தாமனி

10. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ________ நீட்சியாகவே உள்ளது.
அ) உடற்பயிற்சியின் ஆ) மருந்தின் இ) உணவின் ஈ) வாழ்வின்

**ஆ) பொருத்துக.** 4 x 1 = 4

11. மட்டு - நன்கு
12. கண்ட - வினையெச்சம்
13. வையம் - அளவு
14. நடந்து - உலகம்

**II. எவையேனும் 8 வினாக்களுக்கு விடையளி.** 8 x 2 = 16

15. உலகம் எவற்றால் ஆனது?
16. ஓவிய எழுத்து என்றால் என்ன ?
17. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார் ?
18. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது ?
19. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
20. பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது ?
21. அதிகமாக உண்பதால் ஏற்படும் தீமைகளாக கவிமணி குறிப்பிடுவன யாவை ?
22. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
23. எச்சம் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?
24. பகைவர்களிடம் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை யாது ?
25. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துக்கள் உ, ஊ
ஆ) உலகம் ஐம்பூதங்களால் ஆனது

**III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி.** 5 x 4 = 20

26. நோய்கள் பெருகக் காரணம் என்ன ?
27. கோணக் காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை ?
28. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவமாற்றம் குறித்து எழுதுக



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

29. நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளாக நீங்கள் கருதுவன யாவை?
30. அறிவியல் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை ?
31. உடனிகழ்ச்சிப் பொருள் என்றால் என்ன ?
32. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

**IV. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி.** 5 x 2 = 10

33. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
   அ) பூ - (கொய் / பறி) அ) சுவர் -(கட்டு / எழுப்பு)
34. உவமைத் தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
   அ) குன்றின் மேலிட்ட விளக்கைப் போல
   ஆ) வேலியே பயிரை மேய்ந்தது போல
35. சீர்களை முறைப்படுத்தி எழுதுக.
   அ) யாழ்கோடு அன்ன கொளல் கணைகொடிது வினைபடு பாலால் செவ்விது ஆங்கு.
36. கலைச்சொல் தருக. அ) Talent ஆ) Ridge
37. எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக.
   அ) உலக வனவிலங்கு நாள் அக்டோபர் 6
   ஆ) உலக ஈரநில நாள் பிப்ரவரி 2
38. தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.
   அ) நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்?
   ஆ) கடமையைச் செய்.
39. தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.
   அ) பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும்
   ஆ) திரு வி க எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ்பெற்றது.

**V. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 2 x 5 = 10

40. விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.
41. படம் சார்ந்த ஐந்து சொற்களை எழுதுக.



**VI. அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6

42. "வாழ்க நிரந்தரம்" எனத் தொடங்கும் பாரதியார் பாடல் **(அல்லது)**
   "கற்றோர்க்கு" எனத் தொடங்கும் குமரகுருபரர் பாடல்
43. "தன்குற்றம்" எனத் தொடங்கும் திருக்குறள்.

**VII. விரிவான விடையளிக்க.** 3 x 8 = 24

44. அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.
   **(அல்லது)**
   ஆ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
45. அ) திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.
   **(அல்லது)**
   ஆ) வெட்டுக்கிளியும் சருகுமானும், கதையைச் சுருக்கி எழுதுக.
46, அ) கொடுக்கப்பட்டுள்ள தலைப்பில் கட்டுரை எழுதுக. **"நான் விரும்பும் கவிஞர்"**
   **(அல்லது)**
   ஆ) கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக
   நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
   முன்னுரை நோய் வரக் காரணங்கள் நோய் தீர்க்கும் வழிமுறைகள் வருமுன் காத்தல் - உணவும் மருந்தும் - உடற்பயிற்சியின் தேவை - முடிவுரை



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| பள்ளிக்கல்வித்துறை – பெரம்பலூர் மாவட்டம் – எட்டாம் வகுப்பு | | | |
| தமிழ் – காலாண்டுப் பொதுத் தேர்வு – 2024 | | | |
| உத்தேச விடைக்குறிப்புகள் | | | |
| பகுதி - I | | | |
| பகுதி - I | அனைத்து வினாக்களுக்கும் குறியீட்டுடன் விடையளிக்கவும். | | 10 x 1 = 10 |
| வினா எண் | விடைகள் | | மதிப்பெண் |
| 1 | ஆ | மரபு | 1 |
| 2 | ஈ | வட்டெழுத்து | 1 |
| 3 | அ | தாயாக | 1 |
| 4 | இ | நடுவுநிலைமை | 1 |
| 5 | அ | காலத்தை | 1 |
| 6 | அ | மூன்றாம் | 1 |
| 7 | இ | கோயில் + அப்பா | 1 |
| 8 | அ | நலம் + எல்லாம் | 1 |
| 9 | இ | தாமினி | 1 |
| 10 | இ | உணவின் | 1 |
| ஆ | பொருத்துக. | | 4 x 1 = 4 |
| 11 | | மட்டு - அளவு | 1 |
| 12 | | சுண்ட - நன்கு | 1 |
| 13 | | வையம் - உலகம் | 1 |
| 14 | | நடந்து - வினையெச்சம் | 1 |
| பகுதி - II | | | |
| பகுதி -II | எவையேனும் எட்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. | | 8 x 2 = 16 |
| 15 | உலகம் நிலம், நீர் காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய ஐந்தும் கலந்த கலவையாகும் | | 2 |
| 16 | தொடக்கக் காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர், | | 2 |
| 17 | ஓடை எழுப்பும் ஒலிக்கு வள்ளைப் பாட்டின் இசையை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார். | | 2 |
| 18 | இந்தப் பூமியின் ஒவ்வொரு துகளும் செவ்ந்தியர்களுக்குப் புனிதமானதாகும் இந்தப் பூமியை எப்பொழுதும் செவ்விந்தியர்கள் மறப்பதே இல்லை ஏனெனில் பூமி அவர்களுக்குத் தாயாகும். அவர்கள் அந்த மண்ணுக்கு உரியவர்கள் அந்த மண்ணும் அவர்களுக்கு உரியதாகும். | | 2 |
| 19 | க , இய, இயர், அல். | | 2 |
| 20 | தலைவர் முதலில் தன் குற்றத்தைக் கண்டு நீக்கி அதன்பின் பிறருடைய குற்றத்தை ஆராய்ந்தால் அவருக்கு எந்தப் பழியும் ஏற்படாது. | | 2 |
| 21 | செரிமானமின்மை, நோய்வாய்ப்படுதல் | | 2 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 22 | வேர். பட்டை, இலை, பூ, கனி. | 2 |
| 23 | பொருள் முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் எனப்படும்.<br>இது பெயரெச்சம், வினையெச்சம் என்று இரு வகைப்படும். | 2 |
| 24 | பகைவர்களிடம் நாம் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும். | 2 |
| 25 | விடைக்கேற்ற வினா அமைக்க. ( பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக ) | |
| அ | இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் யாவை? | 1 |
| ஆ | உலகம் எவற்றால் ஆனது? | 1 |
| பகுதி -III | **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** | 5 x 4 =20 |
| 26 | இயற்கையை விட்டு விலகியது<br>மாறிப்போன உணவு முறை<br>மாசு நிறைந்த சுற்றுச்சூழல்<br>மன அழுத்தம் | 4 |
| 27 | திரண்டு எழுந்த மேகங்களால் உருவான காற்று வேகமாய் அடித்ததால் பெரிய வீடுகளின் கூரைகள் பிரிந்து சரிந்தன. | 4 |
| 28 | நெடிலைக் குறிக்க ஒற்றைப் புள்ளிகளுக்கு பதிலாக இக்காலத்தில் துணைக்கால் பயன்படுத்தப்படுகிறது.<br>ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துகளுக்கு முன் இருந்த இரட்டைப் புள்ளிகளுக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக்கொம்பு ( ை ) பயன்படுகிறது.<br>குற்றியலுகர குற்றியலிகர எழுத்துகளின் மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் வழக்கொழிந்து விட்டது. | 4 |
| 29 | காலையும் மாலையும் நடைபயிற்சி மேற்கொள்ள வேண்டும்.<br>தூய்மையான காற்றைச் சுவாசித்து தூய்மையான நீரைப் பருக வேண்டும்.<br>குளித்த பிறகு உண்டு இரவில் நன்றாக உறங்க வேண்டும். | 4 |
| 30 | உலக வாழ்விற்கு மிக இன்றியமையாதது அறிவியல். இந்நாளில் அத்தகைய அறிவு தேவை, புறவுலக ஆராய்ச்சிக்கு அறிவியல் கொழு கொம்பு போன்றது. | 4 |
| 31 | ஒடு, ஓடு ஆகிய மூன்றாம் வேற்றுமை உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்<br>எகா :- தாயோடு குழந்தை சென்றது. | 4 |
| 32 | உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன. இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர். | 4 |
| ஆ | **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** | 5 x 2 =10 |
| 33 | சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக. | |
| அ | பூக் <u>கொய்</u> | 1 |
| ஆ | சுவர் <u>எழுப்பு</u> | 1 |
| 34 | உவமைத் தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக. ( பொருத்தமாக இருப்பின் மதிப்பெண் வழங்குக ) | |
| அ | குன்றின் மேலிட்ட விளக்கைப் போலத் திருக்குறளின் புகழ் உலகெங்கும் பரவியுள்ளது. | 1 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| ஆ | வேலியே பயிரை மேய்ந்தது போல நாட்டைக் காக்க வேண்டிய மன்னனே அதிக வரி வசூல் செய்தான். | 1 |
| 35 | சீர்களை முறைப்படுத்தி எழுதுக. | |
| அ | கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன<br>வினைபடு பாலால் கொளல். | 2 |
| 36 | கலைச்சொல் தருக. | |
| அ | Talent -- திறமை | 1 |
| ஆ | Ridge - மலைமுகடு | 1 |
| 37 | எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக. | |
| அ | உலக வனவிலங்கு நாள் அக்டோபர் 6 - சு | 1 |
| ஆ | உலக ஈர நில நாள் பிப்ரவரி 2 - உ | 1 |
| 38 | தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக. | |
| அ | நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய் ? - வினாத்தொடர். | 1 |
| ஆ | கடமையைச் செய் - விழைவுத்தொடர். | 1 |
| 39 | தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக. | |
| அ | பூக்கள் நிறைந்த இடம் சோலை ஆகும். | 1 |
| ஆ | திரு.வி.க. எழுதிய "பெண்ணின் பெருமை" என்னும் நூல் புகழ்பெற்றது. | 1 |
| இ | அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. | 2 x 5 = 10 |
| 40 | <u>பாராட்டுக் கடிதம்</u><br>பெரம்பலூர்,<br>20.09.2024,<br>அன்புள்ள நண்பா,<br>வணக்கம். நான் நலம். உன் நலமறிய ஆவலாய் உள்ளேன்.<br>இந்த ஆண்டு 11.09.2014 அன்று நடைபெற்ற மாநில அளவிளான விளையாட்டுப் போட்டிகளில் நீ கலந்து கொண்டு ஓட்டப்பந்தயத்தில் முதல் பரிசு பெற்ற செய்தி அறிந்து அளவற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.<br>இதே போன்று தேசிய அளவிலானப் போட்டிகளிலும் கலந்துகொண்டு வெற்றிபெற வாழ்த்துகிறேன்.<br>நன்றி<br>அன்புள்ள நண்பன்<br>செந்தமிழன்<br>உறைமேல் முகவரி<br>பெறுநர்<br>செல்வம் க<br>16, பாரதி தெரு,<br>காந்தி நகர்,<br>தஞ்சாவூர் – 25. | 5 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 41 | படம் சார்ந்த சொற்கள்<br>உரல், உலக்கை, எண்ணெய், சுக்கு, மிளகு. கருஞ்சீரகம், சீரகம், பட்டை, கிராம்பு, அண்ணாச்சி பூ, வத்தல், வெற்றிலை, கடுகு, கொத்துமல்லி, வெந்தையம், ஏலக்காய், கசகசா, புதினா, மல்லி, சோம்பு, பூண்டு. | |
| ஈ | அடி பிறழாமல் எழுதுக. | 4+2=6 |
| 42 | **தமிழ்மொழி வாழ்த்து**<br>வாழ்க நிரந்தரம் ! வாழ்க தமிழ்மொழி !<br>வாழிய வாழியவே !<br>வான மளந்தது அனைத்தும் அளந்திடு<br>வண்மொழி வாழியவே !<br>ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி<br>இசைகொண்டு வாழியவே !<br>எங்கள் தமிழ்மொழி ! எங்கள் தமிழ்மொழி !<br>என்றென்றும் வாழியவே !<br>- பாரதியார் | 4 |
| | அல்லது | |
| | **கல்வி அழகே அழகு**<br>கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்<br>மற்றோர் அணிகலம் வேண்டாவாம் - முற்ற<br>முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே<br>அழகுக்கு அழகுசெய் வார்.<br>- குமரகுருபரர் | 4 |
| 43 | **திருக்குறள்**<br>தன்குற்றம் நீங்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்<br>என்குற்றம் ஆகும் இறைக்கு.<br>- திருவள்ளுவர் | 2 |
| உ | விரிவான விடையளிக்க. | 3x8=24 |
| 44 | ❖ மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும், பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினான்.<br>❖ அதற்காகப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.<br>❖ தொடக்கக் காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ, வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.<br>❖ அடுத்ததாக ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது. அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் முதல் ஓசையைக் குறிப்பதாயிற்று. | 8 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | ❖ இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை 'ஒலி எழுத்து நிலை' என்பர். இன்று உள்ள எழுத்துகள் ஒரு காலத்தில் பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபுகளாகக் கருதப்படுகின்றன. | |
| | அல்லது | |
| | ❖ 'வேர்பாரு; தழைபாரு மிஞ்சினக்கால் பற்பசெந்தூரம்பாரே' என்றனர் சித்தர்கள்.<br>❖ வேர், தழையால் குணம் அடையாதபோது சில நாட்பட்ட நோய்களுக்கு, தாவரங்கள் மட்டும் அல்லாமல் உலோகங்களையும் பாஷாணங்களையும் சித்த மருந்துகளாக நம் முன்னோர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.<br>❖ அந்தக் காலத்தில் எப்படி மூலிகைகளை மருந்தாகப் பார்த்தார்களோ அப்படியே தாதுப்பொருட்களையும், உலோகத்தையும் பார்த்தார்கள்.<br>❖ அவற்றை மருந்துகளாக மாற்றும் வல்லமை சித்தமருத்துவத்தில் இருந்திருக்கிறது.<br>❖ ஒரு மருந்தை எடுத்துக்கொண்டால் அதற்கு விளைவும் இருக்கும்; பக்கவிளைவும் இருக்கும். ஆனால் தமிழர் மருத்துவத்தில் பக்க விளைவுகள் இல்லை. அதற்குக் காரணம் மருந்து என்பதே உணவின் நீட்சியாக இருக்கிறது.<br>❖ ஒரு கவளம் சோற்றை உடல் எப்படி எடுத்துக் கொள்கிறதோ, அப்படியேதான் சித்த மருத்துவத்தின் லேகியத்தையும், சூரணத்தையும் உடல் எடுத்துக் கொள்ளும்.<br>❖ அதனால் உணவு எப்படி பக்கவிளைவுகளைத்தருவதில்லையோ அதே போலச் சித்த மருந்துகளும் பக்கவிளைவுகளை ஏற்படுத்துவதில்லை.<br>❖ தமிழர் மருத்துவத்தின் சிறப்பு என்னவென்றால், தனித்துவமான பார்வை இதன் முதல் சிறப்பு; இரண்டாவது சூழலுக்கு இசைந்த மருத்துவம் இது. இந்த மருத்துவத்தின் பயன்பாடோ, மூலக்கூறுகளோ, மருந்துகளோ சுற்றுச்சூழலைச் சிதைக்காது.<br>❖ மிக முக்கியமான சிறப்பு என்னவென்றால், நோய்க்கான சிகிச்சையை மட்டும் சொல்லாமல், நோய் மீண்டும் வராமலிருப்பதற்கான வாழ்வியலையும் சொல்கிறது.<br>❖ அதாவது 'நோய்நாடி நோய் முதல்நாடி என்ற திருக்குறளின்படி நோயை மட்டுமன்றி, அதன் காரணிகளையும் கண்டறிந்து ஒருவரை நோயில்லாத மனிதராக்குகிறது. | 8 |
| 45 | **ஆன்ற குடிப்பிறத்தல்**<br>**முன்னுரை:**<br>ஒரு மாணவனின் உள்ளத்தில் ஆசிரியர் விதைத்த விதை எவ்வாறு பயன் தந்தது என்பதை இக்கதை மூலம் காணலாம்.<br>**காணாமல் போன வேட்டி:**<br>ஒரு சிற்றூர் பள்ளியின் தலைமை ஆசிரியர் அவர். எளிய குடிசை வீடுதான் அவருடைய வீடு. ஒருநாள் காலை தனது எட்டு முழ வேட்டியைத் தும்பைப் பூவைப் போலத் துவைத்து கொடியில் காயப் போட்டு விட்டு, பள்ளிக்குச் சென்றிருந்தார். | 8 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | பள்ளி முடிந்து வந்து பார்க்கும்போது, அந்த வேட்டியைக் காணவில்லை.<br>**ஊர் மக்கள் கூற்று:**<br>கிணற்றில் பல முறை தண்ணீர் எடுப்பதற்குச் சிகாமணி தான் அந்தப் பக்கம் அடிக்கடி வந்தான். எல்லோரும் வேலைக்குப் போய் இருந்த நேரத்தில், அவன் அந்த வேட்டியை எடுத்து இருப்பான். சிகாமணியின் தந்தை பண்டுக் கிழவர். இவனும் ஒரு திருடன். இவன் மகனும் ஒரு திருடன் என்று ஊரார் கூறினார்கள்.<br>**திருக்குறள் வகுப்பு:**<br>சிகாமணியின் மகன் சகாதேவன். அவனும் அந்த ஆசிரியரின் பள்ளியில்தான் நான்காம் வகுப்பு படிக்கின்றான். வேட்டி விசயத்தை அந்தப் பையனிடம் அவர் காட்டிக் கொள்ளவில்லை.<br>'அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்<br>பண்புடைமை என்னும் வழக்கு'<br>என்னும் குறளை ஆசிரியர் நடத்தத் தொடங்கினார். சிறந்த குடியில் பிறப்பது யார் கையில் உள்ளது? எனவே, திருவள்ளுவர் அப்படிக் கூறியிருக்க மாட்டார். அப்பன் திருடனாக இருக்கலாம், மகன் நல்லவனாக இருப்பான் என்று விளக்கம் தந்தார்.<br>**சகாதேவன் செயல்:**<br>மதிய உணவிற்காக ஆசிரியர் வீட்டுக்குச் சென்றிருந்தார். அப்போது கிருஷ்ணமூர்த்தி என்ற இளைஞன் ஆசிரியரின் வேட்டியைக் கொண்டு வந்தான். இதனைச் சகாதேவன் கொடுத்ததாகவும் தாங்கள் நடத்திய பாடத்தால், அப்பா திருடி வைத்திருந்த உங்களுடைய வேட்டியை அவன் கொடுக்கச் சொன்னான் என்றான். ஊரார் ஒன்று கூடி விட்டனர்.<br>**ஆசிரியரின் எண்ணம்:**<br>சிகாமணி தான் திருடன் என்பதை, அவன் மகன் சகாதேவன் சொல்லிவிட்டான். 'அவனுக்குத் தண்டனை வாங்கி கொடுக்கலாம் வாருங்கள்' என்று ஆசிரியரை ஊரார் அழைத்தனர். சிகாமணிக்குத் தண்டனை கிடைத்தால், சகாதேவனுக்கும் பாதிப்பு ஏற்படும் என்று ஆசிரியர் எண்ணினார். ஊரார் எவ்வளவு கூறியும் ஆசிரியர் ஏற்றுக் கொள்ளவில்லை. என் வீட்டில் திருடு போகவில்லை என்று நான் சாட்சியம் சொல்வேன் என்றார். மக்களுக்கு எல்லாம் புரிந்தது.<br>**முடிவுரை:**<br>"வள்ளுவரின் குறட்பாக்கள் ஒருவரின் மனதை மாற்றம் செய்யும் என்பதில் ஐயமில்லை" என்பதை இக்கதை வாயிலாக நாம் அறிய முடிகின்றது. உலகப் பொதுமறை கற்று, அதன் வழி நடப்போம். | |
| | ( அல்லது) | |
| | **வெட்டுக்கிளியும் சருகுமானும்**<br>**முன்னுரை:**<br>காடர்கள், பழங்குடியின மக்கள், காடுகள், செடிகொடிகள், விலங்குகள் கதைகளைத் தொடர்பான தங்கள் பிள்ளைகளுக்கும் பேரன் பேத்திகளுக்கும் சொல்லி வந்தனர். அத்தகைய கதைகளுள் ஒன்று தான் 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' ஆகும். | 8 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | **வெட்டுக்கிளியும் சருகுமானும்:**<br>குறிஞ்சிப் புதரின் தாழப் படர்ந்திருந்த கிளையில் பச்சை வெட்டுக்கிளி ஒன்று வசித்து வந்தது. அது ஒரு வாயாடி.<br>ஒரு மாலை நேரம் கூரன் என்ற பெண் சருகுமானை வெட்டுக்கிளி பார்த்தது. 'என்ன கூரன், பார்த்து வெகுநாள் ஆயிற்று! இவ்வளவு நாட்கள் எங்கே போயிருந்தாய்? ஏன் இங்கும் அங்குமாய் வேகமாக ஓடுகிறாய்?' அதற்குச் சருகுமான், 'காட்டின் அந்தக் கோடியில் இருந்தேன். இப்பொழுது உன்னிடம் பேச எனக்கு நேரமில்லை. பித்தக்கண்ணு என்னைத் துரத்திக்கொண்டு வருகிறது.'<br>விழுந்து கிடந்த மரத்தைப் பார்த்ததும் அதன் அடியில் கூரன் ஒளிந்து கொண்டது. தலையை மட்டும் தூக்கி வெட்டுக்கிளியை எச்சரித்தது. பித்தக்கண்ணு உன்னிடம் என்னைப் பற்றிக் கேட்டால் வாயைத் திறந்து எதையும் சொல்லிவிடாதே என்றது.<br>**வெட்டுக்கிளியும் பித்தக்கண்ணும்:**<br>கூரனைத் தேடிக் கொண்டு பித்தக்கண்ணும் ஓடைப் பக்கம் வந்தது. வெட்டுக்கிளி அதன் கண்ணில் பட்டதும் அதைப் பார்த்து உறுமியது. 'கூரன் இங்கு வந்தாளா?' என்றது. வெட்டுக்கிளிக்கு உற்சாகம் தலைக்கு ஏறியது. பித்தக்கண்ணுவை இவ்வளவு பக்கத்தில் பார்ப்பது இதுதான் முதல்முறை. பித்தக்கண்ணுவைப் பார்த்ததால் ஏற்பட்ட பரவசத்தை அடக்க இயலாமல் தன்னை அறியாமல் கூரன் ஒளிந்திருந்த இடத்தருகே குதித்துக் குதித்துச் சென்றது.<br>அதைக்கண்ட பித்தக்கண்ணு, கூரன் பதுங்கி இருந்த மரத்தடிப்பக்கம் சென்று மோப்பமிட்டது. அங்கு புனுகுப் பூனையின் துர்நாற்றமே எட்டியது. அதனால் உறுமிக் கொண்டே அந்த இடத்தை விட்டுக் கிளம்பி வேறு பக்கம் சென்றது.<br>**உயிர்பிழைத்த கூரன்:**<br>கூரன் வெளியே வந்தது. தன் மறைவிடத்தை ஏறக்குறையக் காட்டிக் கொடுத்ததற்காக வெட்டுக்கிளி மீது அதற்குக் கோபமான கோபம். அதற்கு ஒரு பாடம் கற்பித்தாக வேண்டும் என்று எண்ணியது. 'இனி இப்படிச் செய்தால், திரும்பி வந்து உன்னை என் கால்களால் மிதித்து நசுக்கிவிடுவேன்' என்று கூறிக் காட்டுக்குள் ஓடியது.<br>**முடிவுரை:**<br>அன்றிலிருந்து கூரனின் கூர்ப்பாதங்கள் எங்கே தன்மீது பட்டுவிடுமோ என்ற அச்சத்திலேயே வெட்டுக்கிளி வாழ்ந்து வருகிறது. இதனால் தான் இன்றும் கூட வெட்டுக் கிளிகள் ஓர் இடத்தில் நிலைத்து இருக்க முடியாமல் குதித்த வண்ணமுள்ளன. | |
| 46 | **நான் விரும்பும் கவிஞர்**<br>**முன்னுரை:**<br>இருபதாம் நூற்றாண்டின் விடி வெள்ளி, புதுமைக் கவிஞர், தேசியக் கவி, மகாகவி எனப் பாராட்டப்பட்டவர் நம் பாரதியாரே ஆவார். பாட்டுக்கொரு புலவனாய்த் திகழ்ந்த பாரதி தம் பாடல்கள் மூலம் மக்களிடையே தமிழ்ப்பற்று. விடுதலை உணர்வு ஆகியவற்றை வளர்த்தார். | 8 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| | | |
|---|---|---|
| | **பிறப்பும் இளமையும்**<br>பாரதியார் எட்டயபுரத்தில் 11.12.1882 ஆம் நாளில் பிறந்தார். இவரின் பெற்றோர் சின்னசாமி, இலக்குமி அம்மையார் ஆவார். சிறிய வயதிலேயே கவிதை புனையும் திறமையைப் பெற்றார். தமது பதினோறாம் வயதில் பாரதி என்னும் பட்டம் சான்றோர்களால் வழங்கப்பட்டது.<br>**விடுதலை வேட்கை**<br>பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு என்றார். இப்படிப்பட்ட தம் உயர்ந்த பாரதம் ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டிருப்பதை எண்ணி நெஞ்சு பொறுக்குதில்லையே' எனப் பாடினார் வெள்ளையரின் அடக்கு முறைக்கு அஞ்சாது விடுதலை உணர்வு மிக்க பாடல்களைப் பாடி மக்களைத் தட்டி எழுப்பினார்.<br>**ஒருமைப்பாட்டுணர்வு**<br>எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் இந்திய மக்கள் என்றார், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு தம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே எனப் பாடி மக்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தினார்.<br>**மொழிப்பற்று**<br>பல மொழிகளைக் கற்றிருந்த பாரதி யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்று தமிழின் சிறப்பை எடுத்துரைத்தார்.<br>**நாட்டுப்பற்று**<br>பாரதத் தாயின் அடிமைத்தளையைத் தகர்த்தெறிய இவர் எழுதிய பாடல்கள் இளைஞர்களை வீறு கொண்டு எழச் செய்தது சுதந்திரப் போராட்ட வீரர்கள் மேடைகளிலும் வீதிகளிலும் இவருடைய பாடல்களையேப் பாடினார்கள்.<br>**சமுதாயத் தொண்டு**<br>சாதிக் கொடுமைகள், பெண்ணடிமை, சமூக ஏற்றத்தாழ்வுகள் போன்றவை இந் நாட்டிலிருந்து விலக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். மதவெறிப் பிடித்து அலைபவர்களின் போக்கினைக் கண்டித்தார்.<br>**படைப்புகள்:**<br>பாரதியார் எண்ணற்ற கவிதை, உரைநடை நூல்களைப் படைத்துள்ளார். குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், ஞானரதம், தராசு போன்ற எண்ணற்ற படைப்புகளைப் படைத்துள்ளார்.<br>**முடிவுரை**<br>வளமான, வலிமையான பாரதத்திற்குத் தேவையான சிறந்த வழிகள் யாவும் அவருடைய பாடல்களில் உள்ளன. அவற்றைப் பின்பற்றினால் அவர் கனவு கண்ட பாரதத்தை நம்மால் உருவாக்க முடியும். | |
| | (அல்லது) | |
| | **நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**<br>முன்னுரை - நோய்வரக் காரணங்கள் - நோய்தீர்க்கும் வழிமுறைகள் - வருமுன் காத்தல் - உணவும் மருந்தும் - உடற்பயிற்சியின் தேவை- முடிவுரை | 8 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**முன்னுரை**

உடல்நலம் தான் மனித வாழ்வின் முக்கியப் பங்கினை வகிக்கின்றது. இதனால்தான் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பர். நாம் வாழ்வில் பெற்ற செல்வங்களை அனுபவிப்பதற்கு உடல்நலம் மிக அவசியமாகும். உலகில் மனிதன் தனக்கான ஆயுட்காலம் முழுவதும் சிரமம் இல்லாமல் நலமுடன் வாழ வேண்டுமாயின் நோய்களை அண்டவிடாது ஆரோக்கியமாக வாழ்ந்தால் மட்டுமே முடியும். எனவே நோயின்றி வாழ நாம் என்ன செய்ய வேண்டும். என இக்கட்டுரையில் காண் போம்.

**நோய் ஏற்படக் காரணங்கள்**

நமது உடலில் நோயை ஏற்படுத்தப் பல காரணங்கள் உள்ளன. நோயானது தொற்று நோய், தொற்றா நோய் என இரு வகை நோய்கள் காணப்படுகின்றன.
மனிதன் இயற்கையை விட்டு வெளியே வந்தது தான் நோய்கள் ஏற்படுவதற்கு முதன்மைக் காரணமாக விளங்குகின்றது. மாறிப்போன உணவுப் பழக்கவழக்கங்கள் நோய் ஏற்பட மற்றுமோர் முக்கிய காரணமாக விளங்குகின்றது.

**நோய் தீர்க்கும் வழிகள்நோய் தீர்க்கும் வழிகள்**

நமது உடலில் ஏற்படும் நோய்களிற்கு பெரும்பாலும் தவறான வாழ்க்கை முறைதான் காரணமாகின்றன. எனவே நமது வாழ்க்கை முறையில் சில மாற்றங்களை கொண்டு வருதல் மூலம் நோயற்ற ஆரோக்கியமான வாழ்வை வாழலாம். முடிந்தளவு இயற்கை உணவுகளை உட்கொள்வது அவசியமாகின்றது. கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகளைத் தினமும் சேர்த்துக் கொள்ளாமல் விட்டமின்கள் நிறைந்த உணவுகளை அதிகம் எடுத்துக் கொள்வதன் மூலம் நோயைத் தீர்க்க முடியும். உணவினை உரிய நேரத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும். உடற்பயிற்சி தினமும் தவறாமல் மேற்கொள்ள வேண்டும். மேலும் சரியான தூக்கம் நமது நோய்களைக் குணப்படுத்தும் வழிமுறைகளில் ஒன்றாகும்.

**உணவும் மருந்தும்**

நாம் உண்ணும் உணவு புரதம், கொழுப்பு,மாவுச் சத்து,கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துக்கள் போன்ற அனைத்தும் கலந்த சமச்சீர் உணவுகளாக இருக்க வேண்டும். உணவில் இவற்றைத் தேவையான அளவு சேர்த்துக் கொள்ள வேண்டும். உணவை நன்றாக மென்று விழுங்குதல் வேண்டும். அப்போதுதான் வாயிலுள்ள உமிழ்நீர் வேண்டிய அளவு சுரந்து உணவுடன் கலந்து எளிதில் செரிமானம் அடைந்து உணவிலுள்ள சத்தானது உடலில் சேரும். காய்கறிகளை முக்கால் வேக்காட்டில் வேகவைத்து உண்ண வேண்டும். அப்போதுதான் காய்கறிகளில் உள்ள ஊட்டச்சத்து முழுமையாக கிடைக்கும். இப்படி உண்டால் உணவே மருந்தாகும்.

**உடற்பயிற்சியின் தேவை**

உடற்பயிற்சியானது உடலின் வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. அதிகப் பசியைக் கட்டுப்படுத்தும் ரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்தி வைத்திருப்பதற்கும் உடற்பயிற்சி அவசியமாகும். எனவே தினமும் உடற்பயிற்சி



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

என்பது மிகத் தேவையான ஒன்றாகும்.

**முடிவுரை**

இறைவன் நமக்குக் கொடுத்த இந்த மானுட வாழ்வினை வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியத்துடன் வாழ்வது சிறந்ததாகும். எனவே உடலை நோயின்றி பாதுகாத்து ஆரோக்கியமான வாழ்வினை வாழ வேண்டும். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும் என்பது போல் உடலை வைத்துத்தான் உயிரைப் பாதுகாத்து ஆரோக்கியமான வாழ்வை வாழ முடியும் எனவே உடல் ஆரோக்கியத்தினைப் பேணுவோம் உயிரைப் பாதுகாப்போம் நோயற்ற ஆரோக்கியமான வாழ்வினை வாழ்ந்து மகிழ்வோம்.


| ஆக்கம் | |
|---|---|
| இரா.வேல்முருகன்<br>நேரு மேல்நிலைப்பள்ளி, எறையூர்<br>வேப்பந்தட்டை வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் - 621133 | பெ. ஜெயராமன்<br>அரசு மேல்நிலைப்பள்ளி, அம்மாபாளையம்,<br>பெரம்பலூர் வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம் - 621101. |


Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com